

பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை (28.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 273


தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று பக்தி பூர்வமாக நடைபெற்றது.

பக்தர்கள் புடைசூழ முருகப் பெருமான் தேரில் வலம் வந்து அருள்காட்சி அளிப்பதையும் அடியார்கள் தூக்குக்காவடி, ஆட்டக் காவடிகளை எடுத்து தமது நேர்த்திகளை நிறைவேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : சுந்தா)

# 13 பொது மக்கள் படுகொலை;

# சாட்சிக்கு நீதிமன்றம் உத்தரவாதம்

## கிளிநொச்சியில் இருந்து வந்து இங்கு சாட்சியம் அளிப்பதற்கு

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட் 28

**அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் கடந்த வருடம் மே மாதம் 13ஆம் திகதி பதின்மூன்று பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் சாட்சிக்கு யாழ். நீதிமன்றம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கி உள்ளது.**

கடந்த வருடம் மே 13ஆம் திகதியன்று அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களைச் சேர்ந்த பதின் மூன்று பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்த வழக்கின் முக்கிய சாட்சியான பெண்மணி ஒருவர் உயிர் அச்சத்தின் பேரில் கிளிநொச்சி சென்று வசித்து வருகிறார்.

இந்த வழக்கு விசாரணைகளை ஊர்காவற்றுறை மேலதிக நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டபோது -

பிரதான சாட்சியான சம்பந்தப்பட்ட பெண்மணியை இங்கு அழைத்துவர அனுமதி வழங்கி, அவருக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குமாறு பாதிக்கப்பட்டோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி றெமேடியஸ் கேட்டுக்கொண்டார்.

அந்தப் பெண்மணி யாழ்ப்பாணம் வந்து சாட்சியமளிக்கவும் அணிவகுப்பில் பங்குபற்றி கொலையில் சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காட்டவும் தயாராகவும் இருக்கின்றார்.

அவர் யாழ்ப்பாணம் வந்து கிளிநொச்சி திரும்புவதற்கு நீதிமன்றம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கவேண்டும் என்று சட்டத்தரணி நேற்று நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தார்.

குறிப்பிட்ட சாட்சிக்கு யாழ்ப்பாணத்தில் (08ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பு

கொழும்பு,ஓக. 28

இலங்கை இராணுவத்துக்கு பயிலுநர் சிப்பாய்களைச் சேர்த்துக்கொள்ளும் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முதலாம் கட்ட ஏற்பாட்டின்பேது நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளுக்கு 5,700 பேர் சேர்க்கப்பட்டனர் என இராணுவ ஊடகப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஜி.பி. சமரசிங்க தெரிவித்தார்.

இராணுவத்தினருக்கான ஆள்சேர்ப்பு (08ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் முருகன் மஞ்சத்தில் வீதி உலா

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லைக்கந்தன் ஆலய பெருந்திருவிழாவில் பத்தாம் திருவிழாவான நேற்று மஞ்சத்தில் முருகப்பெருமான் வந்து பக்தர்களுக்கு அருள் காட்சி அளித்தார்.

மாலை 4.30 மணிக்கு வெளி வீதியுலா வந்த முருகனை ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் கூடி நின்று வழிபட்டனர். (1)

## வவுனியா - மன்னார் எல்லைப் புறத்தில் இரு தரப்புகளும் படைகளைக் குவிக்கின்றன

கொழும்பு, ஓக.28

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் இடையிலான எல்லை நெடுக, இரு புறங்களிலும், இரு தரப்பினரும் பெரும் யுத்த ஆயத்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு புறங்களிலும் படை மற்றும் ஆயுதத் தளபாடக் குவிப்பில் இரண்டு பக்கத்தினரும் ஈடுபட்டிருக்கும் அதேசமயம், அந்த எல்லை நெடுகிலும் அவ்வப்போது மோதல்களும் தொடர்ந்து வெடித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓமந்தை மேற்கில் கள்ளிக்குளம் மற்றும் தம்பனைப் பகுதிகளில் ஞாயிறு இரவும் நேற்று அதிகாலையும் மோதல்கள் இடம்பெற்றன.

இச்சண்டையில் புலிகள் தரப்பில் ஒன்பது பேர் உயிரிழந்தனர் என்றும், ஐந்து படையினர் காயமுற்றனர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (08ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸின் வீட்டுக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக. 28



சிரேஷ்ட ஊடகவியலாளரும், 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பாதுகாப்புத்துறைச் ஆய்வாளரும், பிரதி ஆசிரியருமான இக்பால் அத்தாஸின் வீட்டுக்கு முன்னால் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

நுகேகொட விஜேராமவில் உள்ள அவரது வீட்டுக்கு முன் பாகவே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

மேல்மாகாணசபை உறுப்பினர்கள் சிலரின் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். 'இக்பால் அத்தாஸ் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் பாதகர்' என்ற சுலோக அட்டைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர். (08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலையிலிருந்து வெளியேறும் டாக்டர்களின் கட்டாய சேவை அறிவிப்பு; மனித உரிமை மீறல் என்கிறது வைத்தியர் சங்கம்

கொழும்பு,ஓக.28

யாழ். பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்திலிருந்து வெளியேறும் வைத்தியர்கள் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கட்டாயம் சேவை செய்யவேண்டும் என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தமை மனித உரிமை மீறல் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட சங்கப் பிரதிநிதி டாக்டர் ஹெம்றிக் வீரசிங்க இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குப் பகுதியில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையை நீக்கும் வழிமுறைகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுடன் அண்மையில் கலந்துரையாடினர்.

அதைத் தொடர்ந்து, யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து சித்தி பெற்று வெளியேறும் டாக்டர்கள் வடக்கு, கிழக்கில் ஒரு வருடம் பணியாற்றவேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தியிருந்தார்.

அமைச்சரின் இந்த அறிவிப்புக்கு தற்போது எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. (08ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அடையாள அட்டைகளைப் பெறுவதற்காக மக்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க வேண்டும்

### படைத்தரப்பிடம் மக்கள் குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.28

குடாநாட்டு மக்கள் விலைவாசி உயர்வு, தொழிலின்மை போன்ற காரணங்களால் கஷ்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விசேட அட்டையைப் பெறுவதற்கு செலவு செய்ய முடியாத சூழலில் உள்ளனர். எனவே அடையாள அட்டை பெறுவதற்கு அவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

படைத்தரப்பிடம் இத்தகைய கோரிக்கையை சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு விடுத்துள்ளது.

யாழ். நகரத் தளபதி கேணல் பிரியந்த ஜயசுந்தரவுடன் நேற்று நடத்திய சந்திப்பில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் அமைந்துள்ள 512ஆவது படையணி அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் அவருடன் மேஜர் பேர்னாட் பெரேராவும் கலந்து கொண்டார்.

மக்கள் குழுவின் சார்பில் அதன் தலைவர் (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புத்தளம் பிரதேசத்தில் விபத்துகளில் மூவர் பலி

கொழும்பு, ஓக. 28

புத்தளப் பிரதேசத்தில் இடம்பெற்ற இரு வேறு வாகன விபத்துகளில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் - சிலாபம் இடையே மாரவெல என்னும் பகுதியில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்கள் தமது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரம் ஒன்றுடன் மோதியதில் படுகாயமடைந்தனர். சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு அவர்கள் இருவரும் மரணமானார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, கொழும்பு - புத்தளம் வீதியிலுள்ள மங்கள வெளி எனும் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற வான் ஒன்று வீதியின் ஓரமாகச் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவருடன் மோதியதில் அந்தப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பாக வான் சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணைக் குட்படுத்தியுள்ளனர். (சி)

# ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் சரிவு!

கொழும்பு, ஓக. 28

உலக நாணயச் சந்தையில் இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஓர் அமெரிக்க டொலருக்கு எதிரான பெறுமதி 112 ரூபா 65 சதமாக இருந்தது. ரூபாவின்பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்ததை அடுத்து நேற்று அப்பெறுமதி 112 ரூபா 90 சதமாக மாறியது.

போகிற போக்கில் இந்த வருட இறுதியில் ஓர் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 120 ரூபா வரை சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என நிதி வட்டாரங்கள் தெரிவித்தன. 2006ஆம் ஆண்டில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி 5 வீதமாக இருந்தது என்றும் -

அது இந்த ஆண்டில் இப்போதே 4.9 வீதத்தை எட்டிவிட்டது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.(சி)

# கூடைப்பந்தாட்டச் சங்கங்களை பதியுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழக அணி வீரர்களுக்கான பயிற்சியை மேற்கொள்ள வசதியாக, பதிவுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். புனிதபத்திரிசியார் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில்மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கொழும்பில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள சிரேஷ்ட தேசிய மட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் பங்குபற்றும். அந்த அணியில் இடம்பெறும் வீரர்களைத் தெரிவு செய்ய இடம்பெறவுள்ள பயிற்சிக்கு முன்னோடியாக கழகங்கள் பதிவு செய்யப்படவிருக்கின்றன என யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தெரிவித்துள்ளது. (1)

## தேர் அச்சு ஏற்று வைபவம்

நாரந்தனை சரவண கர்ணந்தோட்டம்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் முருகப் பெருமானுக்கு புதிதாக உருவாக்கப்படவுள்ள சித்திரத் தேர் அச்சேற்று வைபவம் நாளை (29.08.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு விஸ்வப் பிரம்மஸ்ரீ சி. அமரசிங்கம் ஸ்தபதி அவர் தம் குழுவினரால் நடத்தப்பட உள்ளது.
முருகன் அடியாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- ஆலய தேர்த் திருப்பணிச் சபை.

(64237)




## கண்ணீர் அஞ்சலி

யூரோவில் பொது முகாமையாளர்
மா. இராமதாசனின் அன்புத் தந்தை
**சிதம்பரப்பிள்ளை மார்க்கண்டு**
27.08.2007 காலமாகியதையிட்டு, அன்னாரின் குடும்பத்தினருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யூரோவில் ஊழியர்கள்,**
866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-53489)

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்
இ. ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத் தாய்
**இராமையா சிவயோகம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம். கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி-53490)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் இ. ஜெகதீஸ்வரன்
அவர்களின் அன்புத் தாய்
**இராமையா சிவயோகம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

.ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(64229)

## தேவை

தனியார் கல்வி நிறுவனத்திற்கும் கட்டட ஒப்பந்தகாரருக்கும் உதவியாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
**K.T. Rajah**
English Academy,
Inuvil West.
021 4590727 (Fax), 0773053191.
thangs67@yahoo.com

(64228)

## தேவை

புறொயிலர், கல்பேட், ஊர்க்கோழிகள் என்பன தேவை. தொடர்பு தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, நாச்சிமார் வீதியில் 3 அறை வீட்டுடன் பத்திரிப்பு போடப்பட்ட நிலையில் 7 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. மற்றும் தையல் மெஷின் ஒன்றும் (உபகரணம்) விற்பனைக்குண்டு.
சின்னத்துரை ஜெயசீலன், சுதுமலை தெற்கு, எச்சாட்டி, மானிப்பாய். தொ.பே. 0775177598.

## தவறிவிட்டது

NPJS 3101 எனும் இலக்கத்தையுடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0212222321 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## தேவை

முன் அனுபவமுள்ள கணக்காளர் (Book Keeper) உடன் தேவை.
Jaffna Electrical,
இல. 94 (6), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

(64216)

## போயா தின வழிபாடு நடைபெறமாட்டாது

காலஞ்சென்ற அருட்தந்தை
P.M. இம்மானுவேல்
அடிகளாரின் இறுதி அடக்கத்திருப்பலி இன்று (28.08.2007) செவ்வாக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற இருப்பதனால், இன்று காலை இறைதியான இல்லத்தில் வழமையாக நடைபெறும் போயா தின வழிபாடு நடைபெறமாட்டாது.

**இறை தியானக்குழுவினர்.**

(64233)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
அ. சிவநேசனின் தந்தை
**விசுவலிங்கம் அருளானந்தம்**
அவர்கள் 26.08.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்.
யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்.

(64236)

## மரண அறிவித்தல்கள்

### அருட்தந்தை B.F. பொணிபஸ் அடிகளார்

அருட்தந்தை B.F. பொணிபஸ் அடிகளார் நேற்று (27.08.2007) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்பில் காலமானார்.

அன்னாரின் அடக்க சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செயலர், ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

### திருமதி இராசலட்சுமி இராசதுரை



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி இராசதுரை நேற்று (27.08.2007) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பொன்னையா இராசதுரையின் அன்பு மனைவியும் வடிவாம்பிகை, வசந்தமலர் (கனடா), சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் இராசசேகரன் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), சுதாகர் (கனடா), இராஜி ஆகியோரின் அன்பு மாமியும் ஜதுஷன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), வினோத் (கனடா), வினித் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*985, சிங்கராயர் வீதி,*
*புதிய செம்மணி வீதி,*
*கல்வியங்காடு.*

(64235)

தகவல்:
குடும்பத்தினர்.

### தியாகராசா கணேசர்



(Retired Govt. Analyst)

நல்லூரிரைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா கணேசர் (Retired Govt. Analyst) 26.08.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லூரைச் சேர்ந்த தியாகராசா - சூரியலக்சுமி தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - லீலாவதி தம்பதியரின் மருமகனும் கலாநிதி கார்த்திகாவின் (நாட்டிய ஆசிரியை) பாசமிகு கணவரும் அமிழ்தனின் பாசமிகு தந்தையும் கீதாவின் அன்பு மாமனும் விநாயகன், அழகன் ஆகியோரின் பேரனும் சங்கீதபூசனம் பரம்தில்லைராஜா தம்பதியரின் சம்பந்தியும் கார்த்திகேயன், உஷா, வைத்தியகுமார், நிர்மலா, கல்யாணி, ராதா, குருபரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிட்னியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருமதி இராதா இராதாகிருஸ்ணன்,*
*21/3, ஆடியபாதம் றோட்,*
*திருநெல்வேலி வடக்கு,*
*தொ.பே. 222 5597,*
*0061298916385,*
*0061296748441.*

(64231)

தகவல்:
வை. வைத்தியகுமார்
(பதிவாளர்- யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி),
க. அமிழ்தன்.

### சிதம்பரப்பிள்ளை மார்க்கண்டு

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை மார்க்கண்டு நேற்று (27.08.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், இராமதாசன், காலஞ்சென்ற தேவதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவமாறன், (பொருளியற்பீடம், பேராதனை பல்கலைக்கழகம்), ஜெயமாறன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), ரேவதன், மதுவதனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.08.2007) பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சைவப்பாடசாலை ஒழுங்கை,*
*திருநெல்வேலி வடக்கு.*

(சி-53488)

தகவல்:
மா. இராமதாசன் (யூரோவில்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கு, வலி.தென்மேற்கு பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கென 18 லட்சம் ரூபா!

யாழ்ப்பாணம், ஓக.28

வலி.வடக்கு மற்றும் வலி.தென் மேற்கு பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட் பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திப்ப ணிக்கென வரவு- செலவுத் திட்ட நிதியி லிருந்து 18 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர்கள் இந்த் நிதி ஒதுக் கீட்டைச் செய்துள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கென 5 லட் சத்து 40 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

இந் நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் களான செ.கஜேந்திரன், சுரேஷ் பிரேமச் சந்திரன் மற்றும் திருமதி பத்மினி சிதம்ப ரநாதன் ஆகியோர் ஒதுக்கியுள்ளனர்.

சுன்னாகம் ஐயனார் முன்பள்ளிக்கு 50 ஆயிரம் ரூபாவும், தாவடி காளியம்பாள் சனசமூகநிலையத்திற்கு 2 லட்சம் ரூபா வும், ஏழாலை லெனின் சனசமூக நிலை யத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும், குப்பிளான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத் திற்கு 2 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிர தேச செயலக்ப் பிரிவுக்கு 12 லட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திரு மதி ரூபினி வரதலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார்.

மானிப்பாய் பனை-தென்னை வள அபி விருத்தி கூட்டுறவு சங்கத்திற்கு ஒரு லட் சம் ரூபாவும், மாரீசன்கூடல் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு 40 ஆயி ரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.

ஆனைக்கோட்டை மகளிர் கிராம அபி விருத்திச் சங்கத்திற்கு 40 ஆயிரம் ரூபா வும், மாதகல் லூர்த்துமேரி கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 2 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு கூடைப்பந்து மைதானம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாவும், மாதகல் சென். ஜோசவ் மகாவித்தியாலய நூலக புனர மைப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும்- மானிப்பாய் சென்.ஆன்ஸ் நோ.க.த.க.பாட சாலைக்கு ஒரு லட்சம் ரூபாவும் பண்டத் தரிப்பு இந்துக் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(202- 135-68)

## நலிவுற்றோருக்கு உணவுப் பொருள்கள்

வலி.தென் மேற்கு, ஓக.28

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுற வுச் சங்கம், உலக உணவுத் திட்டத்தின் கீழ் நலிவுற்றோருக்கு வழங்கப்பட்ட வெள்ளை நிற அட்டைக்கு அரிசி, மா, சீனி மற்றும் மரக்கறி எண்ணெ ஆகிய வற்றை வழங்கிவருகிறது. (203-135)

## சமூகப்பணி டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.28

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் இலங்கை சமூகப்பணிக் கல்லூரியினால் சமூகப்பணி தொடர்பான டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் சித்தியடைந்தவர் கள் வெளிவாரியாகவும் அரச சேவையில் தற்போது கடமையாற்றுபவர்களும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். 20-40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக் கலாம்.

எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி பயிற்சி ஆரம்பமாகவுள்ளது. விண்ணப்பங்களை அடுத்த மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 24.08.2007 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிட லாம். (202-86)

## நுகர்வோர் பிரச்சினைகள் குறித்து முறையிட கோருகிறது வலி.தென்மேற்கு பாவனையாளர் குழு

வலி.தென் மேற்கு, ஓக்28

கடைகள், வர்த்தக நிலையங்கள் மற் றும் விற்பனை நிலையங்களில் பொருள் களை நிறைகுறைத்து விற்பனை செய்தல், விலைப்பட்டியலில் குறிப்பிட்ட விலை யிலும் பார்க்க அதிகரித்த விலையில் விற் றல் ஆகியன தொடர்பாக வலிகாமம் தென் மேற்கு பாவனையாளர் ஒருங்கமைப்பு குழு நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது.

விலைப்பட்டியல் இல்லாமல் பொருள் களை விற்பது, தரம் குறைந்த- பாவனைக்கு உதவாத பொருள்களை விற்றல் ஆகியன பற்றியும் இக் குழு நடவடிக்கை மேற் கொள்ளவிருப்பதாக குழுவின் செய லாளர் யே.பெ.அருமைநாயகம் தெரிவித் துள்ளார்.

மேற்படி விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகளை "தலைவர் அல்லது செயலாளர், வலி.தென்.மேற்கு பாவனை யாளர் ஒருங்கமைப்பு குழு, பிரதேச செய லகம், சண்டிலிப்பாய்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (1-100-135)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## திருத்தப்படும் வீதிகள் பயன்படுத்த முடியாதநிலையில்

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பல வீதிகள் நியாப் திட்டத்தின் கீழ் செப்பனி டப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு விடப்படுகிறது.

ஆனால் இவ் வீதிகளால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், பயணிக்க முடி யாத நிலையில் அந்த வீதிகள் வெண்மக் கியாக மாறி வருகிறது.

வீதியில் கிரவல் மக்கி போடப்பட்டு தண் ணீர் ஊற்றி மேலே ஊரி பரப்பப்படுகிறது.

இவ்வாறு பரப்பப்படும் ஊரி போதாத காரணத்தால் வீதியில் கீழ் உள்ள மக்கிகள் வீதியை விட்டு கிழறுப்பட்டு பொதுமக் கள் பாவிக்க முடியாத நிலை உருவாகி வருகிறது. (203-131)

## முதியோர் சங்கம் புனரமைப்பு

வலி.தென்மேற்கு, ஓக.28

மாகியப்பிட்டி கிராம அலுவலர் பிரி வுக்கான முதியோர் சங்கம் கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புனரமைப்பு செய்யப்பட்டது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செய லக சமூக சேவை அலுவலர் வே.அருந்த வராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சங்க உறுப்பினர்களுக்கு முதியோர் அடையாள அட்டையை பெற் றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. புதி ய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

(50-135)

## சமூக பாதுகாப்பு ஒய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு

வலி.தென்மேற்கு, ஓக.28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சமூக நலன்புரி அமைச்சின் சமூகப் பாது காப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சுய தொழில்களில் மற்றும் முறையற்ற துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கான இந்த ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தில் 18 வயதுக்கும் 54 வயதுக்கும் இடைப்பட்ட வயதை உடையவர்கள் சேர்ந்து பயன்பெற முடியும் என்று பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதன் மேலதிக விவரங்களை தத்தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோரி டம் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.





சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய அதிபர் செல்வி ஜெயராணி நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை முதலா வது படத்திலும் -மாணவர்கள் நடித்த நாடகத்தின் ஒரு காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## நவாலியில் காலபோக நெற்செய்கை ஆரம்பம்

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதி விவ சாயிகள் காலபோக நெற்செய்கை மேற்கொள் வதற்காக தமது வயல்களில் குப்பைகளை கொட்டி உழுது பண்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை மாட்டெரு, குப்பை என்பன வற்றுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருவ தாக தெரிவிக்கப்படுகிறது. (203-100)

## மாதகலில் வீதி புனரமைப்பு

நீண்ட காலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்பட்ட மாதகல் விபுலானந் தர் வீதி புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தினர் இப் புனரமைப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றனர். (202-135)

## கால்நடைத் தீவன உற்பதிக்கான மூலப்பொருள்கள் இந்த மாத இறுதிக்குள் தருவிக்கப்படும்

### சமூகசேவைகள் அமைச்சு- ஏற்பாடு செய்துள்ளது

யாழ்ப்பாணம், ஓக்28

கால்நடைத் தீவன உற்பத்திக்கான மூலப்பொருள்கள் இம்மாத இறுதிக்குள் குறைந்த போக்குவரத்துச் செலவுடன் கொழும்பிலிருந்து தருவிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை சமூக சேவை கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிக்கப்பட்டுள்ளதா வது:

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவை சந்தித்த பாற்பண்ணைத் தொழிற் துறை சார்ந்த பிரதிநிதிகள் கால்நடைக ளுக்கான தீவனங்களைத் தயாரிக்கக் கூடிய இயந்திரம் மற்றும் ஆளணி தங்களிடம் இருப்பதாகவும், அதற்குரிய மூலப் பொருள் களை கொழும்பிலிருந்து குறைந்த போக்கு வரத்துச் செலவில் தருவித்துத் தந்தால், தங்களால் குறைந்த விலையில் கால்ந டைத் தீவனங்களை உள்ளூரிலேயே உற் பத்தி செய்ய முடியும் என்றும் தெரிவித்த னர். அத்துடன் பால் உற்பத்திகளை மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் பசுக்களை தந்துதவும்படியும் கோரிக்கை விடுத்தனர்.

கடல் உணவுப் பொருள்களில் நில வும் தட்டுப்பாட்டை ஓரளவு நீக்குவதற் கான பல்வேறு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதே போன்று கால்நடைகள் சார்ந்த உற்பத்தி களின் தட்டுப்பாட்டை நீக்குவதன் மூல மும் அவற்றுக்கான விலைகளைக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருவதன் மூல மும் குடாநாட்டில் நிலவி வரும் போஷாக் கின்மையை இயன்றவரையில் இல்லா தொழிக்க இயலும் என்று அமைச்சர் தெரி வித்தார்.

பால்சார்ந்த உற்பத்திகளை மேலும் அதிகரிக்கும் முகமாக குடாநாட்டின் கால நிலைக்கு பொருத்தமான பசுக்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய் வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வதாகவும் தெரிவித்தார்- என்றுள்ளது. (202)

## காரைநகரிலிருந்து பனைமர உதிரிகளை வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஓக்28

காரைநகர் பிரதேசத்தில் இருந்து பனைமர உதிரிகளை வெளியிடங்களுக் குக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபர் பணிம னையில் அனுமதி பெற்று அவற்றைக் கொண்டு செல்லலாம் என உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

பனைமர எச்சங்களான ஊமல், பனை மட்டை ஆகிவற்றை அனுமதி பெற்றபின் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்க ளில் மட்டும் கொண்டு செல்லமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202-73)

## யாழ்- ஊர்காவற்றுறைக்கான பஸ் சேவை நேர அட்டவணையின்படி நடைபெறுகின்றது

குருநகர்,ஓக.28

யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை தனி யார் சிற்றூர்திச் சேவை நாளாந்தம் அதற் கான நேர அட்டவணையின் படி நடை பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை புதிய பஸ்நிலையத் திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு காலை 6.30 மணிக்கும் யாழ்.வைரவர் கோயில் வீதியிலிருந்து ஊர்காவற்றுறைக்கு காலை 7.15 மணிக்கும் நாளாந்தம் முதலா வது பஸ் சேவை ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்று றைக்கான கடைசி தனியார் சிற்றூர்திச் சேவை பிற்பகல் 4 மணிக்கும் ஊர்காவற் றுறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான கடைசி பஸ் 2 மணிக்கும் நடைபெறுவதாக சேவை வட்டாரங்கள் தெரிவித்தன.(50-51)

## புதிய நிர்வாகிகள்தெரிவு

யாழ்ப்பாணம், ஓக்28

யாழ்.பிரதேச பகிரங்க சேவை ஓய்வூ தியர்கள் நம்பிக்கை நிதியத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிதியத்தின் புதிய தலைவராக வி. ஸ்ரீசக்திவேலும், உப தலைவராக திருமதி பிரான்சிஸ் அன்னம்மாவும், செயலாளராக இ.தவராசாவும், பொருளாளராக எஸ்.ஆர். லோகநாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ள னர். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



ஏமது அமைப்பின் தலைவரும், சிறந்த சமூக சேவையாளரும், ஏழைச் சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்தின் காவலருமாகிய வண.பிதா P.M.இம்மானுவேல் அடிகளாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கை ஆக்குகின்றோம்.

நிர்வாகத்தினரும், மாணவர்களும்.
• வண. பிதா மேரி பஸ்ரியன்,
கல்வி உதவித் திட்டம்.
(BEAS)

(64220)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 11 . 1965



உதிர்வு 07 . 09 . 2006

அமரர் விஸ்வலிங்கம் சற்குணேஸ்வரன் (சற்குணம்)
திதி: 28.08.2007

ஓராண்டு சென்றிடினும்
ஆறவில்லை எம் இதய வேதனைகள்
ஆறுதலின்றித் தவிக்கின்றோம்
எக் கொடியவர்களின் கோரப்பசிக்கு
இரையாகிக் கொண்டீர்கள்
ஆறுதல் கூறும் அன்பு நிறை தெய்வமே!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி மற்றும் குடும்பத்தினர்.

63, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(64206)



## நீங்காத நினைவில்
## 9ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 . 11 . 1939



உதிர்வு 28 . 08 . 1998

அமரர்
### பொன்னையா தியாகராசா
(சாலைப் பரிசோதகர், இ.போ.ச., கிளிநொச்சி, பருத்தித்துறை சாலைகள்)

அன்பின் அகல் விளக்கே
பண்பின் சிகரமே
பாசத்தின் குளிர் நிலவே
பாருக்கு எமையளித்த பகலோனே
அப்பா நாங்கள் மண்ணகத்தில் உங்கள் முகம் மறப்போமா

இன்பத்திலும் துன்பத்திலும் தந்தையாய் இருந்தீர்கள்
அன்பிலும் அரவணைப்பிலும் நல்ல அன்னையாய் இருந்தீர்கள்.
நல் வழி நாம் கற்க நல் ஆசானாக ஆனீர்கள்
வாழ்க்கை பயணமதில் நல் வழி காட்டும் தெய்வமானீர்கள்
உலகுக்கு எமையளித்த உத்தமரே உங்கள் முகம் மறப்போமோ?

அப்பா உங்கள் சிரித்த முகத்தின் மீது சிந்தும் புன்னகை மறப்போமோ?
வஞ்சகம் துளிகூட இல்லாத உங்கள் வண்ணமுகம் மறப்போமோ?
எல்லோர் மீதும் இரங்கும் உங்கள் இனிய முகம் மறப்போமோ?
அன்பு மொழி பேசி எல்லோரையும் அரவணைக்கும் உங்கள்
அன்பு முகம் மறப்போமோ?

தரணியில் நாம் இன்று தலை நிமிர்ந்து
நிற்பதற்கு உங்களை மெழுகாக்கி எமக்கு ஒளி தந்த
தியாகத்தின் சுடர் ஒளியே மறப்போமோ உங்கள் முகம்?

அப்பா அறுந்திட்ட கம்பிதான் இனி இசை தருமோ
முறிந்திட்ட கிளைதான் கனிதருமோ
நீங்கள் இல்லாத வாழ்வெல்லாம் நிலவு இல்லாத வாழ்வப்பா
உங்கள் நினைவில்லாத வாழ்வெல்லாம் மழையில்லாத மேகமப்பா
காலங்கள் தோறும் எம்மை கண்ணின் கருமணிபோல் காத்தவரே
மீண்டும் நீங்கள் வரவேண்டும் நீண்டே பரந்திருக்கும் இந்த உலகமதில்

நிஜங்கள் நிழல்களானாலும் வரும் நினைவுகள்
நிறமாறுவதில்லை - இந்த
உடலில் இருந்து உயிர் பிரியும் வேளையிலும்
எம் உணர்வலைகள் யாவும் அப்பா என்று
உங்களை அழைத்த வண்ணமே இருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் அவனியதில்
அனுதினமும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

இல. 5, புறுடி முன்லேன்
அரியாலை, யாழ்ப்பாணம்.


# தனியார் வங்கியிடம் நாட்டை அடகு வைக்கின்றது இந்த அரசு!

## எதிர்க்கட்சித் தலைவர் விசனம்

கொழும்பு, ஓக. 28



''சீன மக்களுக்கு அபின் கொடுத்து உருவான எச்.எஸ்.பி.ஸி. வங்கியிடம் இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் அடகு வைத்து, பத்து வருட கடன் அடிப்படையில் சுமார் ஐயாயிரத்து அறுநூறு கோடி ரூபாவை (ஐம்பது கோடி டொலரை) பெற அரசு தீர்மானித்துள்ளது.

''பத்து வருட முடிவில் அதிக வட்டியுடன் சேர்த்து பன்னிரண்டாயிரம் கோடி ரூபாவை இந்த வங்கிக்கு நாடு செலுத்த வேண்டியிருக்கும். அதாவது நாட்டின் தலா ஒவ்வொரு பிரஜையும் 13 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை அந்த வங்கிக்குச் செலுத்த வேண்டியிருக்கும்''.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த அரசு இந்த நர்ட்டின் பொருளாதார நிலைமையைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை எச். எஸ். பி. ஸி வங்கிக்கே வழங்கியுள்ளது. அந்த வங்கியின் பணிப்பாளர்கள் சபையில் உள்ள 17 பேரே இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கின்றனர்.

### வங்கியின் விருப்பத்திற்கு அமையவே விலையேற்றம்

பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் வெட்டப்பட்டுள்ளன. இதனால் மக்கள் சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலைக்கு எச்.எஸ்.பி.ஸி. வங்கி இலங்கை அரசிற்கு வழங்கிய ஆலோசனைகளே காரணம்.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நம்பாது- இந்த நாட்டு மக்களையும் நம் பாது - அவர்களின் உதவியை நாடாது - எச். எஸ்.பி.ஸி. வங்கியைத்தான் அரசு முழுக்க முழுக்க நம்பியுள்ளது.

### நாட்டில் பணவீக்கம் 20 வீதத்தைத் தாண்டிவிட்டது

நாட்டின் பணவீக்கம் 20 வீதத்தைத் தாண்டிவிட்டது. மக்களிடம் பணமில்லை. முழு நாட்டையும் இந்த அரசு எச். எஸ். பி. ஸியிடம் அடகு வைத்துவிட்டது.

நாம் எமது ஆட்சியின்போது நாட்டில் எந்த வகையான நிவாரணத்தை அதிகரிக்க இருந்தாலும் சரி - குறைப்பதாக இருந்தாலும் சரி -அவற்றை நாம் நாடாளுமன்றிற்குத் தெரிவித்திருந்தோம்; இந் நாட்டு மக் களுக்கு அறிவித்திருந்தோம். ஆனால், இந்த அரசு எச்.எஸ்.பி. ஸி. வங்கிக்கு மாத்திரம்தான் அவ்வாறானவற்றைத் தெரிவிக்கின்றது.

சீன மக்களுக்கு அபின் கொடுத்து உருவான எச். எஸ். பி. ஸி. வங்கியில் 5 ஆயிரத்து 600 கோடி ரூபாவை 10 வருட கால அடிப்படையில் கடன்பெற அரசு தீர் மானிக்கின்றது.

10 வருட இறுதி யில் 12 ஆயிரம் கோடி ரூபாவை வட் டியுடன் மீளச் செலுத் தும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இந்தப் பணம் மக்களிடமிருந்தே அறவிடப்படவுள்ளது.

நாட்டின் பிரஜை ஒவ்வொருவரும் 10 வருடங்களுக்குத் தலா 13 ஆயிரத்து 500 ரூபாவை எச். எஸ். பி. ஸிக்குக் கடனாகச் செலுத்தவேண்டிவரும். இது விலையேற்றத்தால் துன்பப்படும் மக்களை மேலும் துன்பப்படுத்தும் திட்டமாகும்.

இதன் உண்மை நிலையை உணர்ந்து இதற்கு எதிராகப் போராட நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். - என்றார்.(சி)


### பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள்

2 மாத குறுங்காலப் பயிற்சி வகுப்பு



கூந்தல் அலங்காரம், கேக் ஐசிங், மணப்பெண் ஒப்பனை ஆடை அலங்காரவர்ணமிடல், சாறி - சல்வார் வேலைகள், சாறி பிளவுஸ் சல்வார் கட்டிங் உடையமைத்தல் (6மாதம்), ஓவியக்கலை ஓர்கன் இசைப்பயிற்சி

ஆரம்பம் 02.09.2007
ஞாயிறு காலை முதல்

* புதிதாக இணைவோருக்கு குறைந்த முதலீட்டுடன் மேற்கொள்ளக்கூடிய ''சிறு தொழில்'' பயிற்சி இலவசமாகவே வழங்கப்படும்.
* பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.
* விவரங்கள் எமது அலுவலகத்தில்...

தூரிகை நுண்கலை வளாகம்,
ம.ம.வி.வீதி, நெல்லியடி.

(64213)


## வவுனியாவில் விளையாட்டுப் போட்டி; வீரர்களுக்கு நாளை கப்பல் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.28

வவுனியாவில் நடைபெறும் மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் வீர, வீராங்கனைகளை நாளை காலை 7.30 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வவுனியாவில் இடம்பெறவுள்ளன. இதில் பங்கு கொள்பவர்களுக்கான கப்பல் போக்குவரத்து ஏற்பாட்டை யாழ். அரச அதிபர் செய்துள்ளார். (1)

## ஜனாதிபதி - தொண்டமான் நுவரெலியாவில் சந்திப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் அரசுத் தலைமைக்கும் இடையிலான விரிசல் விலகி, உறவு சீரடைந்து வருகின்றது.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சனியன்று இரவு நேரடியாகச் சந்தித்துப் பேசினர்.

நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதியின் சுற்றுலா மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் சகோதரரும், அவரின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷவுக்கும், இ.தொ.கா. நிதிச் செயலாளர் முத்து சிவலிங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட கருத்து மோதல்கள் தொடர்பாக ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதியிடம் இச் சந்திப்பின்போது நேரடியாக விளக்கிக் கூறினார் என்று கூறப்பட்டது.

அதேவேளை நுவரெலியாவில் இடம்பெற்ற - ஜனாதிபதிக்கான - பகல் உணவு விருந்துபசாரத்திலும் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கலந்து கொண்டார் எனவும் கூறப்படுகின்றது. (சி)


## மரண அறிவித்தல்

### கந்தையாபிள்ளை சிவசுப்பிரமணியம்
(கந்தானை)



காரைநகர், நீலிப்பந்தனையை பிறப்பிடமாகவும் கந்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையாபிள்ளை சிவசுப்பிரமணியம் 25.08.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பிரபல வர்த்தகரான கந்தானைக் கந்தையாபிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் கந்தையாபிள்ளை - நேசரத்தினம் அவர்களது பெறாமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் முள்ளானை, இளவாலையைச் சேர்ந்த நாகையா- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் பாலச்சந்திரன், ரவிச்சந்திரன், சுசீலாவதி, ஜெயச்சந்திரன், பேரின்பவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாமதி, உத்தனா, ஸ்ரோமி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மாமனும் பபிதா, ஜெயதிலீப், சருபா, கீர்த்தனா, கீர்த்திகா, நிலவன், நிலூஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான சண்முகநாதன், வைத்திலிங்கம், நல்லம்மா, தங்கராசா மற்றும் கனகமலர், தனநாயகி, முத்துராசா, தனலட்சுமி, புனிதவதி, சுந்தராம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.08.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் (இல.24, ஹீல்பே- மாவத்தை கந்தானை) நடைபெற்று பூதவுடல் கந்தானை, கப்புவத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
T.P.: 0112248031 (கந்தானை). (64218)

தகவல்:
சுதாமதி பாலச்சந்திரன்
(மருமகள்).



## கலாலயா
பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [பெருமாள் கோயிலுக்கு அண்மையில்]

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

* 3 மாத கால கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் Fabric Painting, பூ வேலை, கைவேலை பயிற்சிகள்.
மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facial அழகுக்கலை நடைபெறும்.
* இருவார கால சாறி பிளவுஸ், பஞ்சாபி, தைத்தல்
(இப்பயிற்சிகளுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை புதிய அனுமதிகள் தொடர்ந்து வழங்கப்படும்)
* புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான 6 மாத கால தையல் வகுப்புகள்

சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் :- 01-09-2007
கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம்:- 03-09-2007

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளின் நிகழ்வுகள்...



அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் அண்மையில் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.கைலாசநாதன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு.திருமுருகன், வலிகாமம் வலய உடற்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா ஆகியோர் அதிபர், ஆசிரியர்கள் சகிதம் விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)



உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

வித்தியாசாலை அதிபர் கவிமணி க.ஆனந்தராசா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.



வல்வை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் வல்வைப் பாடசாலைகளில் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிப்புப் பெற்ற மாணவர்களுடன் விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் திருமதி சிவனருள் சுந்தரம், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரி க.மயிலேறும் பெருமாள், இலங்கை வங்கியின் வட வலய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி சி.கதிரவேற்பிள்ளை மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (படம்: சுந்தா)



கைதடி - நாவற்குளி அ.த.க. பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் அண்மையில் உயர்மட்டக் கல்விச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக சுற்றாடல்சார் செயற்பாட்டுக்காக சாவகச்சேரி பொதுச்சந்தைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாணவர்களில் ஒரு பகுதியினரையும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம். (207)



யாழ்.மத்திய கல்லூரியில் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சாரணர் குழுவின் சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

சாரண தலைவர் எஸ்.சுபேதர் பெர்னாண்டோ சாரணர் ஒருவருக்கு சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம்.

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.28

அகில இலங்கைத் திருமுறை மன்றம் பொர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருதுறைப் பாராயணம் என்பன இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.28

வடமாராட்சி தெற்கு மேற்கு மத்தியஸ்தர் சபையின் மத்தியஸ்தர் விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் கலந்துகொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.மத்தி சத்திய சாயி சேவா நிலையத்தினர் நடத்தும் போயா தின ஆன்மீக நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

2006 ஆம் ஆண்டில் பகவானின் அவதாரக் காட்சிகள் அடங்கிய திரைப் படக் காட்சியும் காண்பிக்கப்படும்.

இதேவேளை - சாயி நிலையத்தில் நாளை தொடக்கம் 7 தினங்களுக்கு தினமும் காலை 8மணிக்கு தொடக்கம் பாகவத புராண படிப்பு இடம்பெறும்.

எதிர்வரும் 4ஆம் திகதி கிருஷ்ண ஜெயந்தி தின நிகழ்வுடன் புராண படிப்பு பூர்த்தியடையும். (202)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.28

வட்டுக்கோட்டை துணைவி ஞானவைரவர் ஆலய சங்காபிசேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (203)

* * *

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் அலய சங்காபிசேகமும் மணவாளக்கோல திருவிழாவும் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.

முற்பகல் 11.30 மணிக்கு சங்காபிசேகமும் மாலை மணவாளக்கோல திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

தெல்லிப்பழை, பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அடுத்தமாதம் 10 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

வடமராட்சி,ஓக.28

தென்புலோலி கர்ந்தியூர் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அபிஷேகம் கடந்த 21ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளைமறுதினம் 30ஆம் திகதி வியாழக்கிழமை 1008 சங்காபிஷேகத்துடன் அபிஷேகம் நிறைவு பெறும். (203-16)

## பாணந்துறையில் ஐந்து சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் மீட்பு!

கொழும்பு, ஓக.28

பாணந்துறை, பின்வத்தை, கொலுவாகொடுவ கால்வாய்க்கு அருகில் சூட்டுக் காயங்களுடன் ஐந்து ஆண்களின் சடலங்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் காலை மீட்டனர்.

இவை, பாதாள உலகக் கோஷ்டிகளின் நீண்ட காலத் தகராறை ஒட்டி இடம்பெற்ற மோதல்களில் கொல்லப்பட்டவர்களினுடையவையாக இருக்கலாம் எனப் பொலிஸார் கருத்து வெளியிட்டனர்.

'சன் பபா' என்ற பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களே கொல்லப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இவர்கள் தமது சகோதரர் ஒருவர் வீட்டில் இடம்பெற்ற சாவு வீட்டில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் - பெரும்பாலும் சனிக்கிழமை முன்னிரவுக்குப் பின்னர் [illegible] இடம்பெற்றிருக்கலாம் எனக் கருதப்பட்டது. (சி)

## செல்வச்சந்நிதி தேர்த்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

உடுப்பிட்டி,ஓக.28

வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

இந்த ஆலயத்தேர்த்திருவிழா நேற்று முற்பகல் இடம் பெற்றது. குடாநாட்டின் பலபாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர்.

கரகம், காவடி போன்றவற்றுடன் நேர்த்திக்கடன் தீர்க்கும் பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்பட்டது.

செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர், சுகாதாரப்பிரிவினர், தொண்டர்கள் ஆகியோர் ஆலய வீதிகளில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன் ஆங்காங்கே படையினரும் காணப்பட்டனர். (203-155)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.28

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் பதினோராம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்னும் தலைப்பில் கவிமணி அன்னைதாசன் சொற்பொழிவாற்றுவார்.

வட்டு சிவன் இந்துசமய அபிவிருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை, அராலி கோமாதா அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களது கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203-79-111)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்றாள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப் - பெருத்த
மயிலில்வரும் வேலா! விமலா! வெனச் சொற்
பயிலவறு மெங்கள் பவம்.

- யோகர் சுவாமிகள்

### அஞ்சி இனி வாழோம்!

நெஞ்சுநிறை மிஞ்சுபயம் மிஞ்சிஉடல் நடுங்க
கெஞ்சி உனை தஞ்சமென நெஞ்சுருகி வேண்ட
கொஞ்சும் இரு மங்கையர்கள் சூழவலம் வந்தாய்
தஞ்சமென நம்பி உனை அஞ்சி இனி வாழோம்.

-விகடகவி

### பக்தர்கட்குத் தக்க பதில் கூறு!

இரண்டு பத்து நான்கு மணி கொண்ட ஒரு நாளை
ஒன்று பத்து இரண்டு மணியாக முடிக்கின்றோம்
அதற்கிடையில் கள்ளன் போல் வந்து உனைப் பார்க்க வேண்டுமா நாம்?
வால்பிடித்த பழக்கமில்லை ஏற்றியுன்னைப் போற்ற
வெட்டியே கேட்கின்றேன் வேலவா நீ தெய்வமானால்
முட்டிடும் இடரழித்து இயல்பு வாழ்க்கை தந்து
எங்களை நீ வாழவிடு; இயலவில்லை யென்றால்
பக்தர்கட்குத் தக்க பதில் கூறு; அன்றேல் எமைக் கொல்லு!

- கவிமணி அன்னைதாஸன், உரும்பிராய்.





இன்று பதினோராம் திருவிழா

கலியுகவரதா! கந்தா! குமரா!
உன் தாழ் பணிந்தோம் காப்பாய் வேலவா!

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
Ph:021-4590720,0773134737


## மேலும் ஆறு இந்திய மீனவரை இலங்கைக் கடற்படை மீட்டது

கொழும்பு,ஓக.28

கிழக்கில் திருகோணமலைக்கு அப்பால் 640 கிலோமீற்றர் தொலைவில் ஆழ்கடலில் ஐந்து நாட்களாகப் பழுதடைந்த ட்ரோலர் ஒன்றில் தத்தளித்துக் கொண்டிருந்த ஆறு இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் மீட்டிருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

'இஷான் லகிறு' என்ற ட்ரோலரில் தொழிலுக்குப் புறப்பட்ட ஆறு இந்திய மீனவர்களே ட்ரோலர் பழுதடைந்ததால் மட்டக்களப்புக்கு அப்பால் ஆழ்கடலில் கடந்த 18 ஆம் திகதி முதல் தத்தளித்தனர் என்று கூறப்பட்டது. அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படை ஐந்து நாட்கள் கழித்து - கடந்த வியாழனன்று அவர்களை மீட்டது.

சம்பந்தப்பட்ட ட்ரோலரையும் மீட்டு வருவதற்கு இலங்கைக் கடற்படை முயன்றது. எனினும், மோசமான கடல் கொந்தளிப்பு மற்றும் தொழில் நுட்பச் சிக்கல்களால் அது சாத்தியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் வடக்குக் கடலில் மேலும் நான்கு இந்திய மீனவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினர் அவர்களை மீட்டனர் என்று அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே. (சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## MICRO COMPUTER ACADEMY
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
No:328,365 Ariyakulam Junction
Stanley Road, Jaffna, Srilanka.

நீண்டகால அனுபவமிக்க விரிவுரையாளர்களின்
சேவையின் கீழ் மிகக் குறைந்த கட்டணத்தில்

**Diploma Courses**

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office | 3Months | 1000/= |
| Diploma in Desktop Publishing | 3Months | 1000/= |
| Diploma in Graphics Designing | 4Months | 1800/= |
| Diploma in Computerized Accounting | 4Months | 2500/= |
| Diploma in Computer Hardware | 3Months | 1800/= |
| Diploma in Web Designing | 3Months | 1500/= |
| Diploma in Internet Technology | 3Months | 1500/= |

**Certificate Courses**

| | | | |
|---|---|---|---|
| Ms Word | 500/= | PageMaker | 700/= |
| Ms Excel | 500/= | CorelDRAW | 700/= |
| Ms Access | 500/= | Photoshop | 700/= |
| Ms PowerPoint | 500/= | Internet & E-Mail | 700/= |

- பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- வரையறுக்கப்படாத செய்முறைப் பயிற்சிகள்.
- கற்கைநெறியின் முடிவில் செய்முறைப்பரீட்சை, எழுத்துப்பரீட்சை நடாத்தப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

☎-021 222 7866

Batch I : 01.09.07 Batch II : 05.09.07
அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்!
Batch III - 08.09.07 Batch IV - 15.09.07


## கண்ணீர் அஞ்சலி

We Serve

எமது கழகத்தின் நீண்டகால உறுப்பினராக இருந்து கழகத்தின் சமூக மேம்பாட்டு வேலைத் திட்டங்கள் பலவற்றிலும் தனது பங்களிப்பை முழுமையாக அளித்த அருட்தந்தை

### P.M. இம்மனுவேல் அடிகளார்

அவர்களின் மறைவுக்கு எமது இதயங்கனிந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடிகளார் பருத்தித்துறை பங்குத்தந்தையாகக் கடமையாற்றிய காலம், வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் மறக்க முடியாத பொற்காலம் ஆகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது ஆறுதலைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(64178) தகவல்: ச.தவச்செல்வன் (செயலாளர்).

அன்னாரின் பிரிவால் ஆற்றொணாத் துயருறும்: வடமராட்சி லயன்ஸ் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### P.M. இம்மனுவேல் அடிகளார்



நாரந்தனையைச் சேர்ந்த அருட்தந்தை P.M.இம்மனுவேல் அடிகளார் (25.08.2007) சனிக்கிழமை பி.ப.4.30 மணியளவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பேதுறுபிள்ளை மரியாம்பிள்ளை -அலேசுப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பீற்றர் வில்பிறட் (வவுனியா), காலஞ்சென்றவர்களான றீற்றம்மா, குலசிங்கம் மற்றும் வினிபிறட் (செல்வி-லண்டன்), அருள்நாதன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றெஜினா (இளைப்பாறிய ஆசிரியை), காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை மற்றும் றெஜினா சின்னமணி, காலஞ்சென்றவரான நாதன் (லண்டன்) மற்றும் மரியகொறற்றி (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான S.R.செலின் (தி.கு.க.) இன் பெறாமகனும் S.R.பிறசன்ரேசன்(தி.கு.க.) இன் மைத்துனரும் மற்றும் S.R.கலிஸ்ரா (அ.கா.ச.) இன் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.08.2007) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் பரி.மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியின் பின்னர், புனித கொஞ்சிசேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
42/5, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணம். (64201)
அருள்நாதன், மரிய கொறற்றி குடும்பம் (இந்தியா).

### திருமதி அருணகிரிநாதன் சிவஞானவதியார்



வட்டு.வடக்கு, சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வவுனியா கணக்காய்வு விடுதி உள்வட்ட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானவதியார் அருணகிரிநாதன் 25.08.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அருணகிரிநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அப்புப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசா- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவநடராஜா (உதவிக் கணக்காய்வு பரீட்சகர்), நிர்மலா(முகாமைத்துவ உதவியாளர்), இராமேஸ்வரன் (பிரான்ஸ்), அமரர் கதிரழகன் ஆகியோரின் அன்புத் தாயும் விஜேந்திரன் (ஆசிரியர்), அனுந்தினி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியும் சுபானுஜனின் பேர்த்தியும் நாகேஸ்வரி அம்மா, மீனாட்சியம்மா, சிவகாமி அம்மையார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரலிங்கம் (லண்டன்), அமரர் பரமானந்தசிவம், யோகநாயகி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைநகர், வட்டு .வடக்கு, சித்தன்கேணி. (64200)
தகவல்: T.விஜேந்திரன் (மருமகன்)

## வடகடல் நிறுவன அபிவிருத்திக்கு அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கும் அதன் ஊழியர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அமைச்சரின் ஆலோசனையின் பேரில் நிறுவப்பட்டுள்ள வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பது குறித்து முக்கிய அவதானம் செலுத்தப்படும். அதேசமயம் ஊழியர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிறுவனத்திற்கான மூலப்பொருள்களை வழங்குவது மற்றும் முடிவுப்பொருள்களைச் சந்தைப்படுத்துவது போன்ற விடயங்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசத்துடன் கலந்துரையாடவும் அமைச்சர் தீர்மானித்துள்ளார் - என்றுள்ளது. (202)

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 15'x10' கடைக்குரிய அலுமினிய பிற்றிங்(கவர்)புடைவைக்கடை, பன்சி கடைக்குப் பாவிக்க உகந்தது. உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: T.P.: 0774366704 (64214)

## கோழிக்குஞ்சு விற்பனை

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட original prima பேட்டுக்குஞ்சு, சிவப்பு, வெள்ளை விற்பனைக்குண்டு.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (64193)

## உடன் விற்பனைக்கு

புதிய தகர Shed (25'x15',15'x8½') Aluminium - Zinc (Corrugated roofing) Gauge - 28, 1" Pakistan pipes, Gates & மீலியுடன் விற்பனைக்கு உண்டு.

T.P.: 021 222 7086 or 0776528643 (64144)

## மணமகள் தேவை

1977, பூரம் 2 இல் செவ்வாய் 48 பாவம், PHD விரிவுரையாளருக்கு படித்த குடும்பத்திலும், 1966 பூரம் கிரகபாவம் 41 வர்த்தகருக்கும், 1975, 8இல் செவ்வாய், பாவம் 18, கனடிய PR க்கும், 1982, பூரம் 20 பாவம், ஆசிரியருக்கும் அழகான இந்து வேளாள குடும்பத்து மணப்பெண்கள் தேவை.

தொடர்பு: முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக்கட்டுவன்.
தொ.பே. 0776140273 (64196)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர் - 1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு :- றாஜீவ்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P.: 222 2867, 222 3529 (64204)

## கண்ணீர் அஞ்சலி

தாளையடி முன்னாள்
பங்குத்தந்தையும் முன்னாள் மறைக்
கோட்ட முதல்வரும், எமது பகுதி
மக்களின் முன்னேற்றத்துக்காக
அயராது உழைத்தவரும்
தாளையடி கத்தோலிக்க இளைஞர்
மன்ற ஆரம்ப கர்த்தாவுமாகிய
அமரர் அருட்தந்தை

### P.M. இம்மனுவேல்


அவர்களுக்கு எமது கண்ணீரைக்
காணிக்கை ஆக்குகின்றோம்.

பெ.செபஸ்ரியன்,
தாளையடி.
(64199)

## துயர் பகிர்கின்றோம்

### விசுவலிங்கம் அருளானந்தம்

(இளைப்பாறிய அதிபர்)



காரைநகர், வேதரடைப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் அருளானந்தம் அவர்கள் 26.08.2007 அன்று இறைபதமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


## அலங்காரக் கண்காட்சி

CAKE AND SUGAR CRAFT EXHIBITION

கேக், மாச்சீனி அலங்காரக் கண்காட்சி நாளை (29.08.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இடம்: வல்வெட்டித்துறை வீதி, வல்வெட்டி. (ஒளியருவி வீடியோ அருகில்)
காலம்: 29.08.2007 முதல் 31.08.2007 வரை.
நேரம்: 10.30 மணி - மாலை 5 மணிவரை.
(64141)

வடமராட்சி மாணவர்களுக்கு!!!

## IIS இன் 90% Mega Offer

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I 02.09.2007 மு.ப. 10 மணி
பிரிவு II 03.09.2007 மு.ப. 10 மணி

- Diploma in Microsoft Office
- Diploma in Computer Programming
- Diploma in Internet Technology
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hardware Technology

Fast Track Classes

பதிவுகள் அனைத்தையும் 01.09.2007 இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

Institute of Informatics Studies
Nelliyady, Karaveddy.
T.P.: 021 226 3335 (64203)

## ANU MAKE UP



பெண்களின் நன்மையைக்
கருத்தில் கொண்டு படித்து
விட்டு வீட்டில் இருக்கும்
பெண்களுக்கென
ஆரம்பிக்கப் பட்ட Anu Make Up
Hindu Bride (இந்து மணப்பெண்)
Christian Bride (கிறிஸ்ரியன் மணப்பெண்)
Frait Facial
Normal Facial
Hair Style
Bridal Dressing
போன்றவை பெண்களுக்காகப் பயிற்றுவிக்கப்படும்.
ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த அழகுக் கலைப் பயிற்சியினால் நீங்கள் வீடுகளிலிருந்தவாறே பணம் சம்பாதிக்க இயலும். உடனே பதிவுகளுக்கு முந்துங்கள்.

இருபாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(பலாலி றோட், கோண்டாவில்)
T.P.: 0776675033
S.ANUSHA
(64198)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் அ.சாந்தகுமார்
அவர்களின் அன்புத்தந்தை

### வி.அருளானந்தம்

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை, காரைநகர்.
(64186)

## அழியாத நினைவலைகள்

11 ஆவது ஆண்டு முதலாவது ஆண்டு



அமரர் நா.இராசதுரை திருமதி இ.திரவியம்

| மலர்வு | உதிர்வு | மலர்வு | உதிர்வு |
|---|---|---|---|
| 27-12-1923 | 24-01-1996 | 13-04-1930 | 07-09-2006 |

திதி:(28.08.2007)பௌர்ணமி

அன்பென்னும் பாலையூட்டி
அறிவெனும் உணவளித்து
எங்களை வாழவைத்த
எம் இதய தெய்வங்களே!
உங்களின் ஆத்ம சாந்திவேண்டி
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

320, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (64172)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மென்மேலும் உறுதியாகிறது யுத்த தீவிர எண்ணப் போக்கு

யுத்தநிறுத்தம் செயன்முறையில் உள்ளது என்று கூறப்பட்டாலும், அது செத்துச் செயலிழந்து நாளாகி விட்டது. உக்கிப்போன காகிதத்தில், உருக்குலைந்த எழுத்துக்களில் அது பதிவு செய்யப்பட்டிருப்பதோடு சரி. உண்மையில் நடைமுறையில் அது இல்லை.

யுத்த நிறுத்தம் இருப்பதாக ஒரு புறம் கூறிக்கொண்டே மறுபுறம் பெரும் யுத்தச் செயற்பாடுகளும், இராணுவ நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் அதிசயப் பூமி இது.

பொதுவாக யுத்த நிறுத்த விடயத்தில் என்றில்லை, தேசிய இனப்பிரச்சினை தொடர்பான சகல அம்சங்களிலுமே இவ்வாறு இரட்டைவேட நிலைப்பாடே தரப்புகளினால் இங்கு வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதும் கண்கூடு.

புதிதாக ஆட்சிப்பீடம் ஏறிய ஜனாதிபதி மஹிந்தரின் அரசு யுத்த வெறிப் போக்கில் தீவிரமாக இருக்கின்றது, அமைதி வழியில் பேசித் தீர்க்கும் நேர்மையும் பற்றுறுதியும் அதற்கு இல்லை என்பதே தமிழர் தரப்பின் பிரதான குற்றச்சாட்டு.

ஆனால் அதை சர்வதேச மட்டம்வரை எதிர்க்கிறது அரசுத் தலைமை. இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு அமைதிப் பேச்சின் மூலம்தான், நாம் இப்போது அதற்குப் புறம்பாக 'பயங்கரவாதி'களால் கிளப்பப்பட்டுவரும் அச்சுறுத்தல்களை மட்டுமே முறியடித்து வருகின்றோம் என்று அரசுத் தலைமை திரும்பத் திரும்ப அடித்துக் கூறி வருகிறது.

ஆனால் அது முற்றிலும் பொய் என்பதை அரசுத் தலைமையின் முக்கிய தரப்பே தனது வாயால் இப்போது உறுதிப்படுத்தியிருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அடுத்து இன்று அரசுக்குள் வலிமை மிக்கவராகவும், முழுப் பாதுகாப்புப் படைகளையுமே கட்டி ஆளும் அதிகாரம் உடையவராகவும் விளங்குபவர் ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷதான். அவர்தான் இந்த உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இராணுவ ரீதியில் தமிழர் தரப்பை அடக்கி வெற்றி கொள்வதில் அரசு முனைப்பாகவும் உறுதியாகவும் இருப்பதைத் தெளிவுபடுத்துவதன் மூலம், அமைதி வழித் தீர்வு சாத்தியமற்றது என்பதைக் கோடி காட்டியிருக்கிறார் அவர்.

*"விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கைக் கைப்பற்றியமை போல, விரைவில் வன்னியையும் கைப்பற்றுவோம். நாம் எதிர்காலத்துக்கு யுத்தத்தைத் தொடரவிட்டு வைத்து விட்டுப் போகமாட்டோம். போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவருவோம்"* - என்று சூளுரைத்திருக்கின்றார் அவர்.

அநுராதபுரம், கல்கிரியாகமவில் ஊர்காவல் அணி ஒன்று பயிற்சி முடித்து வெளியேறும் நிகழ்வில் கடந்த ஞாயிறன்று கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அதாவது, தேசிய இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பான விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் அழித்தொழிப்பது ஒன்றே தமது அரசின் நோக்கம் என்பதைச் சொல்லாமல் சொல்லியும் - அதேவேளை தெட்டத் தெளிவாகவும் - அவர் உணர்த்தியிருக்கின்றார்.

தாம் காணும் இந்தக் கனவில் அவர் வெற்றி பெறுவாரா, புலிகளை முழு அளவில் அடக்கி, தான் எண்ணியதைச் சாதித்துக் காட்டுவாரா என்பவையெல்லாம் வேறு விடயம்.

இவரைப்போல இந்தப் பதவியையும் பாதுகாப்புப் பிரதி அமைச்சர், படைத் தளபதி, ஜனாதிபதி என்று பல்வேறு பிறபதவிகளையும் முன்னர் அலங்கரித்தபடி இதே போல சூளுரைத்த பலர் இப்போது அந்தப் பதவிகளை விட்டு நீங்கிய நிலையில், அந்த சூளுரைகள் மட்டும் நிறைவேறாமல் அப்படியே எஞ்சி - தொங்கி - நிற்கின்றன என்பது கூட வேறு விடயம்.

ஆனால் இத்தகைய சூளுரைகள் அமைதி முயற்சிகளுக்கான கொஞ்ச நஞ்ச வாய்ப்பையும் அடியோடு தகர்த்து, நிரந்தரமாக குழிதோண்டிப் புதைத்துவிடும் என்பது முக்கியமான அம்சமாகும்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ள மற்றொரு கருத்தும் இங்கு நோக்கற்பாலது.

*"கடந்த மூன்று தசாப்தகாலமாகப் புலிகள் தங்களின் தோல்விகளை மூடிமறைக்க சர்வதேச அழுத்தத்தையே வகையாகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் இனிமேல் அதற்கெல்லாம் இடமளிக்கப்படமாட்டாது."* - என்றும் அவர் உறுதிபடக் கூறியிருக்கின்றார்.

அதாவது புலிகளுக்கு எதிராகத் தாங்கள் மேற்கொள்ளப் போகும் இராணுவக் கெடுபிடி நடவடிக்கையில் சர்வதேச அழுத்தத்தைக் கவனத்தில் கொள்ளப் போவதேயில்லை என்பதை வேறு வாசகங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார் அவர்.

ஆக, இது சர்வதேசத்துக்கான ஒரு செய்தியாகவும் கொள்ளத்தக்கது. இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இங்கு தீவிர யுத்த வெறிப் போக்குக் கொண்ட தரப்பினர், சர்வதேச அழுத்தங்களையும், கருத்துக்களையும் எவ்வளவு தூரத்துக்கு உதாசீனம் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்பதை கோடி காட்டும் கருத்தும் கூட இது.

'கெடு குடி சொற் கேளாது!' என்பார்கள். இலங்கைத் தேசிய இனப்பிரச்சினை விடயத்திலும் அரசுப் படைகளின் வழிகாட்டிகள் சர்வதேச சமூகத்தின் சொல்லைக் கேட்க இனிமேல் தயாரில்லை என்பதற்கு இது நல்ல உரைகல்.

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அடிக்கடி அறிக்கைகள் வெளியிட்டு நல்லுபதேசம் செய்து வரும் சர்வதேச சமூகத்துக்கு இக்கருத்துச் சமர்ப்பணம்.

# சுகாதார அமைச்சில் பெரும் நிர்வாக மோசடி; ஆட்சேபித்து தொழிற்சங்க நடவடிக்கைக்கு முஸ்தீபு!

கொழும்பு,ஓக. 28

சுகாதார அமைச்சின் முறையற்ற நிர்வாகம் காரணமாக அந்த அமைச்சில் சுமார் ஐந்நூறு கோடி ரூபா வரை நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோசடியைக் கண்டித்து - இம் மோசடியுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி - அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கத் தீர்மானித்துள்ளது.

இச்சங்கத்தின் செயலாளர் காமினி குமாரசிங்க இது தொடர்பாக நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

கடந்த இரண்டு வருட காலமாக சுகாதார அமைச்சில் பாரிய மோசடி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதுவரை ஐந்நூறு கோடி ரூபா அளவில் நிதி மோசடி இடம் பெற்றுள்ளது.

சுகாதார அமைச்சில் உள்ள பல அதிகாரிகள் இந்த மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வைத்தியசாலைக் கட்டடங்கள் நிர்மாணிப்பு, வைத்திய உபகரணக் கொள்வனவு, மருந்து வகைகள் கொள்வனவு உள்ளிட்ட பல செயற்பாடுகளில் இந்த நிதி மோசடி இடம்பெற்றுள்ளது.

**தரக்குறைவான மருந்து வகைகள்**

அண்மையில் சுகாதார அமைச்சால் வெளிநாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மருந்து வகைகள் தரக்குறைவானவை. அந்த மருந்து வகைகளைப் பாவித்த சிலர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தப் பாதிப்பு ஏற்பட்ட பின்புதான் அம் மருந்துகள் தரக்குறைவானவை என்பது தெரியவந்தது.

உயிரைக் காப்பாற்ற வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் வைத்தியசாலைகளில் வழங்கப்படும் மருந்துகளைப் பாவித்து உயிரைவிடும் பரிதாபகரமான நிலையே இப்போது ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தரக்குறைவான மருந்துகளை இறக்குமதி செய்தும் பல அதிகாரிகள் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மோசடி நடவடிக்கைகள் தொடர்பாக நாம் சுகாதார அமைச்சருக்குப் பல தடவைகள் முறைப்பாடு செய்துள்ளோம். அவர் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மோசடியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி நாம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவுள்ளோம். - என்றார். (சி)

# துயிலும் இல்லங்கள் தொடர்ந்து படைத் தரப்பினரால் சிதைப்பு

## அருவருக்கத்தக்க கொடூரம் என்கிறார் எம்.பி.

கொழும்பு,ஓக.28

போராட்டத்தில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் புதைக்கப்பட்டிருக்கும் மாவீரர் துயிலும் இல்லங்களை இலங்கை அரச படைகள் தொடர்ந்து புல்டோசர்கள் கொண்டு அழித்து வருகின்றன என்று கூறப்படுகின்றது.

நாகரிக உலகம் அருவருக்கத்தக்க வகையில் இந்தக் கொடூரத்தை இலங்கை அரசுப் படைகள் புரிந்து வருகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரன் விசனம் தெரிவித்திருக்கின்றார்.

"யுத்தக் கைதிகளும், யுத்தத்தில் காயமுற்றோரும், யுத்த நினைவுச் சின்னங்களும் - அவை அல்லது அவர்கள் எந்தத் தரப்பைச் சேர்ந்திருப்பினும் - மதிக்கப் படவேண்டும் என்பதே சர்வதேச நாகரிக மரபாகும். அதை மீறி, அநாகரிகமாகவும் கொடூரமாகவும் நடந்து வருகிறது இலங்கை அரசு. இறப்பின் பின்னரும் புலிகளின் போராளிகளை அமைதியாக - குழப்பமின்றி - மீளாத்துயில் கொள்ள அனுமதிப்பதில்லை என்பதில் சிங்கள அரசு தீவிரமாக இருக்கிறது." - என்று கண்டிக்கிறார் அவர்.

அண்மையில் மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தை ஆக்கிரமித்த படைத்தரப்பு, கிழக்கில் புலிகளின் மிகப் பெரிய மாவீரர் துயிலும் இல்லமான தரவை மயானத்தை கடந்த ஜூனில் அழித்தது. தொடர்ந்து தாண்டியடியிலிருந்த மாவீரர் துயிலும் இல்லமும் அடையாளம் இன்றி நாசமாக்கப்பட்டது.

இந்த வரிசையில் இதுவரை அழிக்கப்பட்ட ஏனைய மாவீரர் துயிலும் இல்லங்கள் வருமாறு:-

- ✱ அம்பாறை, கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லம் - 2007இல்.
- ✱ திருகோணமலை மாவட்டம், சம்பூர் ஆலங்கேணிக்குளம் துயிலும் இல்லம் - 2006 இல்.
- ✱ வடமராட்சி எள்ளங்குளம் துயிலும் இல்லம் - 1996இல்.
- ✱ கொடிகாமம், துயிலும் இல்லம் - 1996இல்.
- ✱ வேலணை சாட்டி துயிலும் இல்லம் - 1995இல்.
- ✱ கோப்பாய் துயிலும் இல்லம் - 1995 இல். (சி)

# அருளிசை மாலை இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.28

கல்வியங்காடு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அருளிசை மாலை மற்றும் திருவூஞ்சல் இறுவட்டு வெளியீடு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அற்புதனின் இசையமைப்பில் உருவான இந்த இறுவட்டில் உள்ள பாடல்களை பேராசிரியர் என்.சண்முகலிங்கன், இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேட், என். பரந்தாமன், செல்வி நவரட்ணம் ஆகியோர் பாடியுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை தம்பதியர் பங்குகொள்வர். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்புரையாற்றுவார். ஆலய தர்மகர்த்தா எஸ்.சண்முகலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

(அ-5)

# அடையாள அட்டை வழங்கல் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.நகரப் பகுதியை உள்ளடக்கிய 512ஆவது படையணிப் பிரதேச மக்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கும் பணி கடந்த இரு தினங்களாக துரையப்பா ஸ்ரேடியத்தில் நடைபெற்று வருகின்றது.

ஜே/73,74,75 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்று அடையாள அட்டைகளைப் பெற்றுச் சென்றனர்.

(அ-1-111)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 12 புதன்கிழமை | 29.08.2007 |
| திதி : பிரதமை | பி.ப. 03.14 |
| நட்சத்திரம் : | சதயம் முற்பகல் 09.31 |
| சுபநேரம் : | 04.35 - 06.05 |
| ராகுகாலம் : | 12.05 - 01.35 |

# கொலன்னாவைப் பகுதியில் 35 பேர் சந்தேகத்தில் கைது

கொழும்பு ஓக.28

கொலன்னாவை மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 35 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அந்தப் பகுதிகளைத் திடீரென சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய பொலிஸார் சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேரிடம் கடும் விசாரணை நடத்தினர் என்றும், அவர்களில் 35 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தமது அடையாளங்களை நிரூபிக்கத் தவறியமையாலேயே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

இவர்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு - விசாரணைகுட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (சி)

# பிராந்திய முகாமையாளரை கௌரவிக்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஓக.28

மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய முகாமையாளராக பதவி உயர்வு பெற்றுள்ள லயன் அ.குகதாசனைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இணுவில் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் த.கைலாசநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாராட்டுரைகள், வசதி குறைந்த மாணவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்கள் வழங்கல் ஆகியன இடம்பெறும். (1)

# நல்லூர் உற்சவ கால கண்காட்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக. 28

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினர், ஆலய வீதியில் உள்ள இந்து விடுதியில் நாளை புதன்கிழமை தொடக்கம் சுகாதாரக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளனர்.

நாளை பிற்பகல் 2 மணிக்கு மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை தாய், சேய் மருத்துவ அதிகாரி திருமதி சிவசங்கர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

சுகவாழ்வுக்கு அவசியமான தாய், சேய் நலன்கள், சூழல் சுகாதாரம், தொற்றுநோய்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இக்கண்காட்சியின் போது விளக்கமளிக்கப்படவுள்ளன. (203)

# கடத்தல், காணாமற்போதல்; மூன்று முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஓக. 28

குடாநாட்டில் காணாமற்போதல், கடத்தல்கள் ஆகியன தொடர்பாக மூன்று முறைப்பாடுகள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மீசாலை வடக்கைச் சேர்ந்த தம்பிராசா ஜீவகாந்தன்(வயது 21) என்பவர் கடந்த 25ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் வீட்டைச் சோதனையிடப் போவதாக வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கெங்காதரன்(வயது 32) என்பவரை கடந்த 5ஆம் திகதி முதல் காணவில்லை என்றும் -

கற்கோவளத்தைச் சேர்ந்த அருமைத்துரை சதீஸ்குமார் (வயது 19) என்பவரைக் கடந்த 13ஆம் திகதி முதல் காணவில்லை என்றும் -

முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசிக் கட்டணத்தைக் குறைக்க ரெலிக்கொம்முக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஓக. 28

தொலைபேசிக் கட்டணங்களைக் குறைப்பது குறித்த யோசனைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்தும்படி உச்சநீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

தொலைபேசிக் கட்டணங்களைக் குறைப்பதற்கு உத்தரவாதமொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி நுகர்வோர் சேவைச் சங்கம் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதனடிப்படையில் இந்தக் கட்டணக் குறைப்பின் அனுமதியை நேற்றிலிருந்து ஒரு மாதகாலத்திற்குள் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதிமன்றம் தொலைத்தொடர்பு கண்காணிப்பு அமைப்பிற்கு உத்தரவிட்டுள்ளது.

இதனடிப்படையில் வீடுகளுக்கான மாதாந்தக் கட்டணம் 350 ரூபாவாகக் குறையும் அதேநேரம், வர்த்தகக் கட்டணங்கள் 950 ரூபாவாகக் குறைக்கப்படும் என்றும் -

ஜனவரி மாதத்திலிருந்து இந்தக் கட்டணங்கள் நடைமுறைக்கு வரும் நிலையில் நுகர்வோரிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டுள்ள தொகை நவம்பர் மாதக் கட்டணத் தொகையிலிருந்து கழிக்கப்படும் என ரெலிக்கொம் நிறுவனம் நீதிமன்றில் உறுதியளித்திருக்கின்றது.

இதேவேளை- நவம்பர் முதலாம் திகதியிலிருந்து தொலைபேசிக் கட்டணங்கள் மேலும் 9.03 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளதாகவும் வீட்டுத் தொலைபேசிக் கட்டணங்கள் 345 ரூபாவால் குறையுமெனவும் ரெலிக்கொம் நிறுவனம் நீதிமன்றில் குறிப்பிட்டது.

இந்தக் கட்டணக் குறைப்புக் காரணமாக 170 கோடி ரூபாவை தாங்கள் இழக்க உள்ளதாக ரெலிக்கொம் நிறுவனம் மேலும் கூறியுள்ளது. (சி)

## இராணுவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கை எட்டுவதற்கு ஒருதொகுதி பயிலுநர் சிப்பாய்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் எனவும் இதற்கான முழு ஒத்துழைப்பை இளைஞர், யுவதிகள் வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (சி)

## ஊடகவியலாளர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளரான இவருக்கு கடந்த காலங்களில் பாரிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டதையடுத்து, அரச பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. தற்போது அந்தப் பாதுகாப்பு அகற்றப்பட்டுள்ளது. தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அகற்றப்பட்டதையடுத்து, தமக்கு மரண அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருக்கின்றன என கடந்த சிலதினங்களுக்கு முன்னர் அவர் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றமை அவருடைய உயிருக்கு மேலும் அச்சுறுத்தலாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் ஞாயிறு இரவு நடந்த மோதல்கள் குறித்துப் புலிகள் தரப்பிலிருந்து உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியாகவில்லை.

ஆனால் மன்னார், வவுனியா மாவட்டப் பிரதேசங்கள் நெடுகிலும் இரு தரப்புகளின் எல்லைப் புறங்களை ஒட்டி ஆங்காங்கே மோதல்கள் தொடர்ந்து அவ்வப்போது இடம்பெற்று வருவதைப் புலிகளின் தரப்பு ஊர்ஜிதப்படுத்தியது.

இந்த மோதல்கள், இப்பிரதேசத்தில் பெரும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான முன்னெடுப்பா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் எனப் புலிகளின் வட்டாரங்கள் மேலும் கூறின.

இந்த எல்லையை ஒட்டி பெரும் யுத்தத் தயாரிப்புகளில் இரு தரப்பினருமே ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுவதை அந்த வட்டாரங்கள் மறுக்கவில்லை.

மடுத் தேவாலய உற்சவத்தை ஒட்டி இந்த மாத நடுப்பகுதியில் இப்பிரதேசத்தில் சற்றுத் தணிந்திருந்தது போல காணப்பட்ட யுத்த முஸ்தீபுகள், இப்போது மீண்டும் முழு அளவில் சூடு பிடித்து முடுக்கி விடப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

புதியபோர்முனைகள்வன்னியை அண்டித் திறக் கப்படக்கூடும் என்ற சந்தேகத்தை இந்த எல்லைப்புறம் நெடுகிலும் இடம்பெற்று வரும் படைக் குவிப்பும், யுத்த ஆயத்த ஏற்பாடுகளும் உருவாக்கி வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## 13 பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கும் என்று நீதிவான் உறுதியளித்தார்.

பிரஸ்தாப சாட்சிக்கு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணம் வருவதற்கு ஏற்பாடு செய்வதாக சட்டத்தரணி நீதிவானிடம் தெரிவித்தார். ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி அடையாள அணிவகுப்பை நடத்த ஏற்பாடு செய்யும்படியும் அன்றைய தினமே அடையாள அணிவகுப்பை பூர்த்தி செய்யவேண்டும் என்றும் நீதிவான் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (அ-1)

## டாக்டர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று செய்தியாளர் மாநாடு நடத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

அங்கு சங்கத் தலைவர் ஹெம்றிக் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகங்களில் இருந்து தமது படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் வைத்தியர்கள் தமது திறமைக்கேற்ற வகையில் எந்தப் பகுதியிலும் கடமையாற்ற அனுமதிக்கப்படவேண்டும்.

உள்ளகப் பயிற்சியாளர்களாக நியமனம் பெறும் வைத்தியர்கள் விசேட வைத்திய நிபுணரின் கீழ் பயிற்சிபெற அனுமதிக்க வேண்டும். அதனை விடுத்து வடக்கு, கிழக்கில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை காரணமாக அங்கு கடமையாற்ற கட்டாயப்படுத்தப்படக் கூடாது - என்றார் அவர்.

இக்குற்றச்சாட்டை மறுத்து அமைச்சர் தெரிவித்ததாவது:-

வட கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்களின் பற்றாக்குறையை தீர்த்து வைக்கும்படி நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனை தீர்க்கும் முகமாகவே புதிய நியமனங்களைப் பெறும் வைத்தியர்கள் வடக்கு, கிழக்கில் ஒரு வருடம் சேவையாற்ற வேண்டும் என்று சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்தது.

வைத்தியர்களின் பற்றாக்குறையை நீக்கும் வகையில் தமது அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்ததாகவும், வைத்தியர்களின் உரிமைகளுக்கு எதிராக நடவடிக்கைகளைமேற்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-5)

## விசேட அடையாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, செயலாளர் எஸ்.பரமநாதன், முன்னாள் யாழ். குரு முதல்வர் அருட்திரு. செல்வராசா அடிகள், இலங்கை வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.அருமை நாயகம், மீன் பிடித்துறை ஆலோசகர் எஸ்.ராஜாராம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் மக்கள் குழு முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு -

* விசேட அடையாள அட்டையைப் பெறுவதற்கு மக்கள் பெருமளவில் செலவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். உணவுப் பொருள்களின்விலைஉயர்வு, தொழில்இன்மை ஆகிய காரணமாக இன்னற்படும் மக்களுக்கு இந்த செலவு பெரும் சுமையாகும்.

எனவே அவர்களுக்கு அடையாள அட்டை பெறுவதற்கு அரசு கொடுப்பனவு ஒன்றை வழங்கவேண்டும்.

* விசேட அடையாள அட்டைகளை 10 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெறவேண் டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. 15 வய துக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்குவதே பொருத்தமானது.

* குடும்பப் பதிவு, விசேட அடையாள அட்டை, சைக்கிள் பதிவு என்று பல்வேறு சுமைகளை மக்கள் மீது படைத்தரப்பு சுமத்தி உள்ளது. அதற்கு மேலாக பொலீஸாரும் மக்கள் பதிவு ஒன்றை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளனர். இதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக பதிலளித்த படைத்தரப்பு தெரிவித்ததாவது:-

1996ஆம் ஆண்டு வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டைகளின் ஆவணங்கள் இப்போது கைவசம் இல்லாத காரணத்தாலும் பொதுமக்கள் தமது வெளிமாவட்டப் பயணங்களை சிக்கல் இன்றி மேற்கொள்ள உதவும் நோக்கத்துக்காகவுமே விசேட அடையாள அட்டைகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொலீஸார் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் ஏதும் இருப்பதாக அறியவில்லை. அதை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்வோம்.

15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவது தொடர்பாக உயர்மட்டத்துடன் கலந்துரையாடி அறிவிப்போம்- என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### போக்குவரத்தில் இறுக்கம்

யாழ்.நகரப் பகுதியில் போக்குவரத்தில் கடைப்பிடிக்கப்படும் இறுக்கம், மக்களை பெரிதும் பாதித்துள்ளது. அதில் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடித்து மக்களின் சீரான போக்குவரத்துக்கு உதவவேண்டும் என்று மக்கள் குழு கேட்டுக்கொண்டது.

நல்லூர் உற்சவ காலத்தில் ஊரடங்கை குடாநாடு முழுவதற்கும் தளர்த்தி மக்களின் வழிபாட்டுக்கு உதவவேண்டும் என்றும் அந்தக் குழு கேட்டுக்கொண்டது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தளர்த்தப்பட்ட ஊரடங்கு நேரத்தை யாழ். பிரதேச செயலக பிரிவிலும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (அ-1-5)


NOW AVAILABLE
LGA & 478 Mother Brds
Celeron & Pentium4 Proc
40, 80, 160 &250 Hdd
SDR, DDR1 & DDR2
4.1, 51. & 7.1 Sounds
TV Tuners, VGA Cards,
Keyboars, Mouse,
Speakers, Woofers,
Combo Drive, DVD-RW, Modems, Scanners,
Printers, CRT & LCD Monitors, Network
Devices, UPS & All Computer Needs
New PC System
Intel D 2.66Ghz,
Core 2 Duo Mboard
256 Mb DDR2
40 Gb Hard disk
CDROM Drive
15" Color Monitor
ATX case with PS
Kboard,Mouse&SPK
39900/-
Flash Drive
1GB & 2GB
UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
Ph:021-4590720

மானிப்பாயில் முதன் முதலில்
100% Practical Education!!
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்!!
(பெண்களுக்கான தனிப்பிரிவுகளும் ஆரம்பமாகையால் பெண்களும் இப் பிரிவில் இணைந்துகொள்ளலாம்)
06.09.2007ற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 0777-110862
(மானிப்பாய்ப் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

பெருமையுடன் அறியத்தருகின்றோம்
ICDL (International Computer Driving Licence) இன் வடகிழக்கிற்கான அனுமதி பெற்ற ஒரேயொரு பரீட்சகர்களாக நாம் தெரிவுசெய்யப்பட்டுள்ளோம் என்பதனைப் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.
ICDL யாருக்கு ?
ஆசிரியர்கள்
அரச/ அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள்
மாணவர்கள்
கணனியில் சர்வதேச தரச் சான்றிதழை எதிர்பார்த்திருப்போர்க்கு..
இன்றே உங்கள் சர்வதேச தரச்சான்றிதழைப் பெற விரையுங்கள். அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
STP Your Partner in IT Solutions
149, Kasthuriar Road. Jaffna.T.P:0212222674.

ICT Grade 10 English / Tamil Medium R. Kumaran - B.Sc.
Potpathy Road, Kokuvil
T.P. 0776577359 புதிய பிரிவுகள் ஆரம்பம்

மூன்றே மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட உத்தரவாதம்!!
தொடர்புகளுக்கு 0776408622.

கணக்கீடு பாலகஜன்
A/L 2008,2009 PAPER CLASS (MCQ)
BEACON யாழ் — Tue, wed 3-4p.m
BRAINPOWER குருநகர் — Sat, Sun 4-6p.m
ஆரம்பம் :- wed / Sat
நடந்து முடிந்த A/L 2007இற்கான கணக்கீடு பாடத்திட்டத்திற்கான scheme பார்வையிடலாம்.

அறிவொளி Nallur
A/L 07, துரித மீட்டல் பிரிவுகள்
ஆரம்பம்: 01.09.2007 Sat.
BIO. : Mr. அல்போன்ஸ் Sat., Sun. 2.30 p.m.
CHE. : Mr. அன்பு Sat., Sun. 8 a.m.
PHY. : Mr. K. செல்வன் Wen., Fri. - 3.30 p.m.
C.Maths. : Mr. V.S. சிவகரன் Sat., Sun. 9 a.m.

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கீழ்வரும் கணனிக்கற்கை நெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!
Advanced Diploma in Information & Communication Technology
Advanced Diploma in Computer Hardware Engineering
Advanced Diploma in Computer Programming
Diploma in Microsoft Office
Diploma in Desktop Publishing
Diploma in Computerized Accounting Packages
05.09.2007ற்கு முன்னர் மேற்கொள்ளவும். 06.09.2007 Batch - 01 ஆரம்பம்!!
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 0777-110862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

SPECIAL ENGLISH
An Integrated Course
* பேச, வாசிக்க, எழுத.
* துரித, விரிவான போதனை.
* இலக்கண - இலக்கியமான கற்கைநெறி.
* ஆரம்ப நிலையிலிருந்து.
* அனைவருக்கும் உரியது.
ஆரம்பம்: 02.09.2007 மு.ப.10 - 12 வரை
ஆசிரியர் த.க.பஞ்சாட்சரம்
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Diploma in Auto CAD
(With Manual Drawing)
பொறியியல் பீட மாணவர்களுக்கான விசேட பிரிவு
MGS Supported By UNDP/JRRP
மேலதிக விபரங்களுக்கு 324, Palaly Road, Jaffna


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.08.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org